**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்.**
**முன்னிலை : திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்**

2025−ம் ஆண்டு ஜனவரி மாதம் 10 ஆம் நாள் வெள்ளிக்கிழமை
திருவள்ளுவராண்டு 2055, ஸ்ரீகுரோதி வருடம், மார்கழித்திங்கள் 26 ம் நாள்

**இ.ம.எண். 450/2022**

**இ.ம.எண். 229/2022**

**in**

**அ.வ.எண். 126/2022**

1. K.சின்னச்சாமி
2. C.சக்திவேல் ... மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

/எதிர்/

1. P.பழனியம்மாள்
2. K.சாந்தி
3. P.சக்திவேல் ... எதிர்மனுதாரர்கள்/ வாதிகள்

இம்மனு என் முன்பாக 07.01.2025 ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.வடிவேல்சாமி, B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.பெ.தங்கமணி, B.Sc.,B.L., அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களையும், வழக்காவணங்களையும் பரிசீலனை செய்து, இதுநாள் வரை இந்நீதிமன்ற சீரான பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றத்தால் பகரப்படும்.

**<u>உத்தரவு</u>**

மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் இ.ம.எண்.229/2022ல் நியமிக்கப்பட்டுள்ள நீதிமன்ற ஆணையரை மீண்டும் (Re–Visit) தாவா சொத்தை பார்வையிட்டு மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள் தரப்பில் காண்பிக்கப்படும் இயற்கை அமைப்புகளை பொறுத்து கூடுதல் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையரை (Re–Visit) நியமித்து உத்தரவிடக்கோரி உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் கட்டளை 26 விதி 9ன் படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1. மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்</u> :–**

i) இம்மனுவின் மனுதாரர்கள் அசல் வழக்கில் பிரதிவாதிகளாவார்கள். அசல் வழக்கானது மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது விளம்புகை மற்றும் நிலைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார். மேற்படி அசல் வழக்கானது தாக்கல் செய்த சமயத்தில் தாவா சொத்தின் இயற்கை அமைப்புகளை பார்வையிட நீதிமன்ற ஆணையரை நியமிக்ககோரி எதிர்மனுதாரர்கள்/வாதிகள் இ.ம.எண்.229/2022 என்ற மனு தாக்கல் செய்து மேற்படி மனுவில் நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார்.

ii) எதிர்மனுதாரர்கள் நீதிமன்ற ஆணையரை ஒருதலைபட்சமாக அழைத்துச்சென்று அவர்களுக்கு வேண்டிய வகையில் தாவா சொத்தின் இயற்கை அமைப்புகளில் பல முக்கியமான அம்சங்களை விட்டுவிட்டு காட்டியுள்ளார்கள். மேற்படி நீதிமன்ற ஆணையர் சென்ற சமயத்தில்

மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள் தாவா சொத்தில் இல்லை. அதனால் மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்களால் தாவா சொத்தின் முழுமையான இயற்கை அமைப்புகளை நீதிமன்ற ஆணையருக்கு மனுதாரர்கள் தரப்பில் தெரிவிக்க இயலாமல் போய்விட்டது.

iii) மேற்படி எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கை மனுதாரர்களின் பூமிகளான ரீ.ச.1173 க்குள் அனுபவப்படி தடபாத்தியம் கோரி தாக்கல் செய்துள்ளார்கள். உண்மையில் மனுதாரர்கள் பூமியான ரீ.ச.1173 க்குள் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித தடபாத்தியமும் உரிமையும் இல்லை. மேலும் எதிர்மனுதாரர்கள் ரீ.ச.1173 வடகோட்டில் கிழமேலாக சென்று அனுபவிக்கவில்லை. மேற்படி எதிர்மனுதாரர்கள் பூமியான ரீ.ச.1170 காலையில் வடக்கோட்டில் கிழமேலாக தடம் வந்து பின்னிட்டு ரீ.ச.1172 காலையில் வடக்கு நோக்கி செல்லும் தடத்தில் சென்று எதிர்மனுதாரர்கள் அவர்களது பூமியை அடைந்து அனுபவித்து வருகிறார்கள்.

iv) மேற்படி ரீ.ச.1170 காலையின் வழியாக கிழமேலாக வரும் தடமானது பின்பு வடக்கு நோக்கி ரீ.ச.1172 காலைக்குள் தென்வடலாக செல்லும் வகையில் இட்டேரி உள்ளது. மேற்படி இட்டேரியை எதிர்மனுதாரர்கள் நீதிமன்ற ஆணையரை அழைத்துசென்று காண்பிக்காமல் விட்டுவிட்டு மேலும் மனுதாரர்கள் அவர்களது பூமியில் கிணற்றுக்கு சென்று வர தற்காலிகமாக ஏற்படுத்தியிருக்கும் தடத்தை காண்பித்துள்ளார்கள். உண்மையில் எதிர்மனுதாரர்களுக்கு மனுதாரர்கள் பூமியில் வடக்கோட்டில் கிழமேலாக தடபாத்தியம் இல்லை.

v) மனுதாரர்கள் அவர்கள் பூமியில் வடக்கோட்டில் கிழமேலாக வந்து பின்னிட்டு ரீ.ச.1172 காலையின் வழியாக தென்வடலாக இட்டேரி அமைப்பு இருப்பதை எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் நீதிமன்ற ஆணையரை அழைத்துச் சென்றபோது காண்பிக்காமல் மறைத்துள்ளார்கள். மேற்படி இயற்கை அமைப்புகளை பொறுத்து நீதிமன்றத்திற்கு நிரூபித்தால் மட்டுமே மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள் அவர்களது வழக்கை தெளிவாக நிரூபிக்க முடியும்.

vi) எனவே மேற்படி வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இ.ம.எண்.229/2022 ல் நியமிக்கப்பட்டுள்ள நீதிமன்ற ஆணையரை மீண்டும் (Re–Visit) தாவா சொத்தை பார்வையிட்டு மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள் தரப்பில் காண்பிக்கப்படும் இயற்கை அமைப்புகளை பொறுத்து கூடுதல் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையரை (Re–Visit) நியமித்து உத்தரவிட வேண்டும் என்பதே மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு மனுவின் சுருக்கமாகும்.

**<u>2. எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரை சுருக்கம் :–</u>**

i) மனுதாரர்கள் மனு பொய். சட்டப்படியும் நியாயப்படியும் மனுவில் கண்டுள்ள சங்கதிகளின்படியும் செல்லத்தக்கதல்ல. இந்த எதிர்மனுதாரர்கள் இந்த எதிருரையில் வெளிப்படையாக ஒப்புக்கொண்ட சங்கதிகளை தவிர மனுவில் கண்டுள்ள மற்ற சங்கதிகளை மனுதாரர்களே கண்டிப்பாக நிரூபணம் செய்யவேண்டியது.

ii) தாவா சொத்தான கிழமேல் தடத்தை ஆணையர் பார்வையிட்டு அதன் அம்சங்கள் குறித்து ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார். ஆகவே தாவா சொத்தை மீண்டும் பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. எனவே மனு முதல்நிலையிலேயே தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாகும். வாதிகள் தங்கள் பூமிகளுக்கு செல்ல தாவா தடம் தவிர வேறு தடம் உள்ளது என்பது பொய். அவ்வாறு இருக்கும் பட்சத்தில் மேற்படி சங்கதிகளை மனுதாரர்கள் தகுந்த ஆவணங்கள் மூலம் நிரூபிக்க வேண்டியது. எனவே இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்பதே எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு எதிருரை சுருக்கமாகும்.

3. இருதரப்பும் கேட்கப்பட்டது. மனு, எதிருரை, இருதரப்பு வாதங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா? என்பதாகும்.

<u>5. தீர்வு:–</u>

6. மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் மேற்படி ரீ.ச.1170 காலையின் வழியாக கிழமேலாக வரும் தடமானது பின்பு வடக்கு நோக்கி ரீ.ச.1172 காலைக்குள் தென்வடலாக செல்லும் வகையில் இட்டேரி உள்ளது என்றும் மேற்படி இட்டேரியை எதிர்மனுதாரர்கள் நீதிமன்ற ஆணையரை

அழைத்துசென்று காண்பிக்காமல் விட்டுவிட்டு மேலும் மனுதாரர்கள் அவர்களது பூமியில் கிணற்றுக்கு சென்று வர தற்காலிகமாக ஏற்படுத்தியிருக்கும் தடத்தை காண்பித்துள்ளார்கள் என்றும் உண்மையில் எதிர்மனுதாரர்களுக்கு மனுதாரர்கள் பூமியில் வடக்கோட்டில் கிழமேலாக தடபாத்தியம் இல்லை என்றும் மேற்படி இயற்கை அமைப்புகளை பொறுத்து நீதிமன்றத்திற்கு நிரூபித்தால் மட்டுமே மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள் அவர்களது வழக்கை தெளிவாக நிரூபிக்க முடியும் என்றும் எனவே இ.ம.எண்.229/2022 ல் நியமிக்கப்பட்டுள்ள நீதிமன்ற ஆணையரை மீண்டும் (Re-Visit) தாவா சொத்தை பார்வையிட்டு மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள் தரப்பில் காண்பிக்கப்படும் இயற்கை அமைப்புகளை பொறுத்து கூடுதல் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையரை (Re-Visit) நியமித்து உத்தரவிட வேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

7. எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாவா சொத்தான கிழமேல் தடத்தை ஆணையர் பார்வையிட்டு அதன் அம்சங்கள் குறித்து ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார் என்றும் ஆகவே தாவா சொத்தை மீண்டும் பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்றும் வாதிகள் தங்கள் பூமிகளுக்கு செல்ல தாவா தடம் தவிர வேறு தடம் உள்ளது என்பது பொய் என்றும் அவ்வாறு இருக்கும் பட்சத்தில் மேற்படி சங்கதிகளை மனுதாரர்கள் தகுந்த ஆவணங்கள் மூலம் நிரூபிக்க வேண்டியது என்றும் எனவே இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

8. வழக்காவணங்களை பரிசீலிக்கும்போது அசல் வழக்கானது எதிர்மனுதாரர்கள்/வாதிகளால் தாவா தடத்தைப் பொறுத்து

மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தைப் பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்யக்கோரி இ.ம.எண்.229/2022 என்ற மனுவானது எதிர்மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டு அம்மனுவில் கடந்த 14.06.2022 அன்று நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டு தாவா சொத்துக்களை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு கடந்த 27.06.2022 அன்று நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கடந்த 28.07.2022 அன்று மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் இ.ம.எண்.229/2022 ல் நியமிக்கப்பட்டுள்ள நீதிமன்ற ஆணையரை மீண்டும் (Re-Visit) தாவா சொத்தை பார்வையிட்டு மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள் தரப்பில் காண்பிக்கப்படும் இயற்கை அமைப்புகளை பொறுத்து கூடுதல் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்து உத்தரவிடக்கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

9. மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் எதிர்மனுதாரர்கள் நீதிமன்ற ஆணையரை ஒருதலைபட்சமாக அழைத்துச்சென்று அவர்களுக்கு வேண்டிய வகையில் தாவா சொத்தின் இயற்கை அமைப்புகளில் பல முக்கியமான அம்சங்களை விட்டுவிட்டு காட்டியுள்ளார்கள் என்றும் மேற்படி நீதிமன்ற ஆணையர் சென்ற சமயத்தில் மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள் தாவா சொத்தில் இல்லை என்றும் அதனால் மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்களால் தாவா சொத்தின் முழுமையான இயற்கை அமைப்புகளை நீதிமன்ற ஆணையருக்கு மனுதாரர்கள் தரப்பில் தெரிவிக்க இயலாமல் போய்விட்டது என்றும் சொல்லப்பட்டுள்ளது.

10. மேற்படி சங்கதிகளைப் பொறுத்து நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தை பரிசீலிக்கும்போது கடந்த 14.06.2022 அன்று மாலை 5.30 மணிக்கு தாவா சொத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்ட சமயத்தில் பிரதிவாதிகள் உடன் இல்லை என்பதையும் வாதிகளின் வழக்கறிஞர் மற்றும் 1 முதல் 3 வாதிகள் மட்டுமே உடன் இருந்துள்ளார்கள் என்பதையும் அறிய முடிகிறது. மேற்படி நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தை பொறுத்து மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபனை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே மேலேகண்ட பரிசீலனைகளில் இருந்து மனுதாரர்கள் தரப்பில் தாவா தடத்தை தவிர எதிர்மனுதாரர்களுக்கு மாற்றுத்தடம் உள்ளது என்றும் அதைப் பொறுத்து நீதிமன்ற ஆணையரை திரும்ப அழைத்துச் சென்று தாவா சொத்துக்களின் இயற்கை அம்சங்களை காண்பித்து அது குறித்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய வேண்டும் என்று சொல்லியுள்ள சங்கதிகள் இந்நீதிமன்றத்தால் ஏற்கும்படியாகவே உள்ளது.

11. வழக்காவணங்களைப் பரிசீலிக்கும்போது இவ்வழக்கில் கடந்த 14.06.2022 அன்று நீதிமன்ற ஆணையராக திரு.V.ஜெயசூரியா அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். மேற்படி திரு.V.ஜெயசூரியா அவர்கள் தற்போது சிவில் நீதிபதியாக தேர்வு செய்யப்பட்டுவிட்டதால் மேற்படியாருக்கு பதிலாக புதிதொரு நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்து உத்தரவிடக்கோரி மனுதாரர்கள் தரப்பில் குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

12. எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் ஏற்கனவே நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ள சொத்துக்களை

மீண்டும் நீதிமன்ற ஆணையரை நியமித்து பார்வையிட வேண்டிய அவசியம் இல்லை என்று சொல்லப்பட்டிருந்தாலும் இம்மனுவில் மனுதாரர்கள் தரப்பில் சொல்லியுள்ள காரணங்கள் ஏற்கும்படியாக உள்ளதாலும் மனுதாரர்கள் தரங்கள் தரப்பு வழக்கை நிரூபணம் செய்ய போதிய வாய்ப்பை வழங்க வேண்டியது நீதியின்பால் அவசியம் என்று இந்நீதிமன்றம் கருதுவதாலும் அசல் வழக்கில் தரப்பினர்களுக்கிடையே ஏற்பட்டுள்ள பிரச்சனையை முழுமையாக தீர்க்கும் பொருட்டும் இம்மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித கஷ்ட நஷ்டமும் ஏற்படப்போவதில்லை என்பதாலும் நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் அளவு வரைபடம் ஆட்சேபனை ஏதும் இருப்பின் அதனை பொறுத்து உபயதரப்பினர்கள் ஆட்சேபிக்க இயலும் என்பதாலும் இம்மனுவில் நீதிமன்ற ஆணையரை மீண்டும் நியமனம் செய்து தாவா சொத்துக்களின் இயற்கை அம்சங்களை பார்வையிட்டு கூடுதல் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய உத்திரவிடுவதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக,**

இம்மனு அனுமதிக்கப்பட்டு, நீதிமன்ற ஆணையராக வழக்கறிஞர் செல்வி.M.சம்யுக்தா, M.S.3580/2023 அவர்கள் நியமிக்கப்படுகிறார். நீதிமன்ற ஆணையர் மனு சொத்தின் இயற்கை அம்சங்களை பார்வையிட்டும் அது குறித்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய வேண்டும் என்றும், மேலும் மனு சொத்தினை பார்வையிடுவதற்கு முன்பு இரு தரப்பினர்களுக்கும் உரிய அறிவிப்புகள் கொடுக்க வேண்டும் என்றும் நீதிமன்ற ஆணையர் கட்டணமாக ரூ.7,000/- (ரூபாய் ஏழாயிரம் மட்டும்) நிர்ணயம் செய்யப்படுகிறது. நீதிமன்ற ஆணையர் கட்டணத்தை மனுதாரர்கள் நீதிமன்ற ஆணையரிடம் நேரடியாக

செலுத்த உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையர் அறிக்கையும் வரைபடமும் தாக்கல் செய்ய மறு வாய்தா 14.02.2025.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2025–ம் ஆண்டு ஜனவரி மாதம் 10 ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2025.01.10 17:34:55 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.

**மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2025.01.10 17:35:00 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.